1972 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 1967 ஆம் ஆண்டில் இடப்பட்ட அரசு ஆணையின்படி, நாட்டினுடைய முக்கியமான நெருக்கடி நிலைமைகள் காரணமாகவும் நிதிப் பற்றுக்குறை காரணமாகவும் வீடுகள் அரசு அலுவலர்களுக்குக் கட்டித் தரும் திட்டம் கைவிடப்பட்டது. ஆனால் ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற கிராமப் புறங்களிலே உள்ள மருத்துவ மனைகளிலே பணியாற்றுகின்றவர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதற்கான முறை இருக்கிறது. இதைத்தவிர மிக முக்கியமான மருத்துவ மனைகளிலே பணியாற்றுகின்ற செவிலியர்களுக்கு எங்கெங்கே அவசியமோ அங்கங்கே குடியிருப்புக்கள் அவ்வப்பொழுது அமைப்பதற்கு விதி தளர்த்தப்பட்டு வீடுகள் கட்டவும் ஒரு முயற்சி இருக்கிறது.

கோவை மாவட்டத்திலுள்ள மேய்ச்சல் நிலங்கள்

*29. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டத்தில் நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படாமல் 'மேய்ச்சல் காடு' என ஒதுக்கப்பட்ட நிலம் எத்தனை ஏக்கர் ?

(இ) மேய்ச்சல் காடுகளுக்காக 50 ஏக்கருக்கு மேல் எவ்வளவு பேருக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலவுடைமைக்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் 74-வது பிரிவின்கீழ், அப்பிரிவு 1971-ஆம் ஆண்டு 41-வது சட்டத்தினால் நீக்கப்படுவதற்கு முன், ஒருவர், உச்சவரம்பிற்குட்பட்ட தம்முடைய நிலப்பரப்பிற்கும் அதிகமாக, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1-25-ம் அதற்கு குறைவாகவும் நிலவரி விதிக்கப்பட்ட நிலங்களை 50 ஏக்கர் வரை மேய்ச்சலுக்காக வென்றே வைத்துக் கொள்ளலாம். இப்பிரிவின்கீழ், கோயம்புத்தூர் மாவட்டத்தில், 436 பேர் உச்சவரம்பிற்குட்பட்ட தம்முடைய நிலங்களும் கூடுதலாக மேய்ச்சலுக்கான நிலங்களை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இந்த 436 பேர்கள் மேய்ச்சல் நிலமாக வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்த மொத்த நிலப்பரப்பு 9,550-42½ ஏக்கராகும். மேய்ச்சல் நிலங்களுக்கென அளிக்கப்பட்டிருந்த விலக்கை 1971-ஆம் ஆண்டு 41-வது சட்டத்தின்கீழ் நீக்கியதினால், 74-வது பிரிவின்கீழ் ஏனைய மாவட்டங்களில் மேய்ச்சலுக்கென விலக்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்த நிலங்களுடன், இந்த நிலங்கள் அனைத்தையும் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது 436 பேர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப் பட்டிருப்பதாகக் கூறினார்கள். அப்படி விதிவிலக்களிக்கப்பட்டவர்கள் யார் யார் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அது ஒரு நீண்ட பட்டியல். அந்தப் பட்டியல் இப்பொழுது என்னிடத்திலே இல்லை.

திரு. எம். தேவராசன் : கோவை மாவட்டத்தினைச் சேர்ந்த திரு. மன்றாடியார் அவர்களுக்கு மேய்ச்சல் நிலம் என்ற பெயரில் எவ்வளவு நிலத் திற்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : என். எஸ். எஸ். மன்றாடியார் அவர் களுக்கு டைரி பார்மிங் அன்ட் லைவ்ஸ்டாக் ப்ரீடிங் என்ற முறையிலே 794.40 ஏக்கர் ஒதுக்கப்பட்டிருந்தது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : திரு. மன்றாடியார் அவர்களுக்கு மேய்ச்சல் நிலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்திலே அவர் நெல் பயிரிட்டு விவசாயம் செய்திருக்கிறார் என்பது உண்மையா ? அதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பயிர் செய்தது உண்மைதான். நீதி மன்றத்திலே வழக்கு இருப்பதாலே அதுபற்றி மேற்கொண்டு தகவல் எதுவும் இப்பொழுது தருவதற்கு இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know whether such exemptions have been granted to Dharmapuri district and if so, the details?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேய்ச்சலுக்காக ஒதுக்கப்பட்ட நிலம் தர்மபுரி மாவட்டத்திலே இருக்கிறது, அது எவ்வளவு என்ற புள்ளிவிவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, 1961-ஆம் ஆண்டு சட்டத்தின் அடிப்படையிலே கோயம்புத்தூர் மாவட்டத்திலே உள்ள பல நிலச்சுவான் தார்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. 1971-ஆம் ஆண்டுச்சட்டத்தின்படி நாம் அந்த நிலங்களையெல்லாம் இப்பொழுது கைப்பற்றியிருக்கிறோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சட்டம் அமலாக்கப்பட்டதற்குப் பிறகு அந்த நிலங்களை கைப்பற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத் துக்கொண்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: 100 ஏக்கர்களுக்கு மேல் வைத்துக்கொள்ளலாம் என்று யார் யாருக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேள்வி, மேய்ச்சல் காடுகளுக்காக 50 ஏக்கருக்கு மேல் எவ்வளவு பேருக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டது என்பது தான். கனம் உறுப்பினர் அவர்கள் 100 ஏக்கர்களுக்கு மேல் யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்று கேட்கிறார்கள். அதற்குவிடை

Thiru N. S. S. Manradiar, Palayakottai—794 acres 40 cents.

Thirumathi Nallammal, wife of Thiru Kolandaisami Gounder, Sankaranandampalayam village—182 acres 62 cents.

Thiru Anoor Sambanda Sarkarai *alias* Sivakumar, Palayakottai—961 acres 25 cents.

Nandakumar Dairy Farm, Ramapattinam—105 acres 70 cents.

Loans given by Industrial Investment Corporation

* 30. *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total amount of loan given by the Tamil Nadu Industrial Investment Corporation to the enterpreneurs of Tamil Nadu from 1965–1970; and

(*b*) the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ)—

தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கிய கடன்களின் தொகை (ஆண்டு வாரியாக) பின்வருமாறு:

ஆண்டு	ரூபாய் லட்சத்தில்
1964-65	333.60
1965-66	387.50
1966-67	261.35
1967-68	72.76
1968-69	193.25
1969-70	200.06